


தொகுதி உ
சித்திரம் 10
பொன்னிவளநாட்டின்
வீர சரித்திரம்
நேருக்கு நேர்
www.ponnivala.com
© 2012 Ponnivala Publishing









தொகுதி 2 சித்திரம்-10

# போருக்கான ஆயத்தம்

பெரிய மதயானையை ஒத்த உருவம் கொண்ட காட்டுப் பன்றியான கொம்பன், பொன்னிவளநாட்டின் வயல்களையும், குளங்களையும், பூந்தோட்டங்களையும் அழித்து துவசம் செய்து, சகோதரர்கள் இருவரையும் சண்டைக்கு அழைத்தது. கொம்பனுடன் போரிட்டு அதனைக் கொல்ல, அவர்கள் தங்கள் குடிபடைகளுடன் செல்வதற்கு ஆயத்தமாகின்றனர். ஆனால், அவர்களின் தங்கை தங்காள் கனவில் கண்டதோ வேறு...




<u>மறுவர்ணணை</u>
பிரெண்டா பெக். இ
கசாண்ரா கொர்நால்

<u>தமிழாக்கம்</u>
சிவசங்கர் நவரட்ணம்
சத்தியபாமா

<u>சித்திரங்கள்</u>
ரவிசந்திரன & குழு

<u>வடிவமைப்பு</u>
பிரியா கோவிந்தராஜன்
ஸ்டெப்பான் ஹானிஹன்

<u>ஓப்பச்சர்</u>
முலர்விழி ராஜ்

<u>வெளியீட்டாளர்</u>
பொன்னிவளா
பப்ளிகேசன்


© 2012
சாப்ட்சைன்ஸ்
அசோசியேசன் லிமிடட்.


வேட்டுவ அரசியான வீரதங்காளும், அவளுடைய அண்ணன்களும் இந்த வனப்பகுதியை சிறந்த முறையில் ஆட்சி செய்தனர். ஆனால்! அந்தப் பொன்னிவளநாட்டு காராளர்கள் அனைத்தையும் நாசம் செய்து விட்டனர்.
அத்தோடு தெய்வசபைக்கிளியை திருடி அதை தடுக்க வந்த பலரையும் கொன்றுவிட்டனர்.
இயற்கையையும் மனிதர்களையும் நேசிக்கத் தெரியாமல் பல தவறுகளை செய்த அந்த கொடியவர்களுக்கு நான் சரியான பாடம் புகட்ட வேண்டிய நேரம் இது.


வேட்டுவ அரண்மனையில் ஒரு நாள்...
காவலாளி! என் பிரியத்துக்குறிய கொம்பன் பல நாட்களாக என்னிடம் உணவுண்ண வரவில்லை.
அவன் எங்கே என்று பார்த்துவிட்டு வா.
சரி தாயே! நான் சென்று பார்த்து வருகிறேன்.
அவன் தினமும் உறங்கும் காளியம்மன் கோவிலுக்குச் சென்று பார்க்க மறந்து விடாதே!

# போருக்கான ஆயத்தம்



கொம்பா! நீ எங்கிருக்கிறாய்?
ஓ.. கொம்பன்!
நீ எங்கே மறைந்திருக்கிறாய்?
கொம்பனை எல்லா இடத்திலும் தேடிய காவலாளி அவனைக் காணக்கிடைக்காமல் அரண்மனைக்குத் திருப்பிச் சென்று வீரதங்காளிடம் கூறினான்.
என்ன காவலாளி கொம்பனைப் பார்த்தாயா?
இல்லை அம்மா! என்னை மன்னியுங்கள். கொம்பனை எங்கு தேடியும் காணக் கிடைக்கவில்லை.
கொம்பா! நீ எங்கு சென்றாய்?


வீரதங்காள் கொம்பனைத் தேடி சென்றாள்.
கொம்பா!
ஓ...கொம்பா!
என்ன? திடீரென ஒரு பலமான சத்தத்துடன் காற்று வீசுகிறதே? ஆ..! அது என் கொம்பனின் மூச்சுத்தான்.
உஸ்ஸ்ஸ்
கொம்பா! நான் உன்னைக் கண்டு விட்டேன்!
எதற்காக இங்கே மறைந்திருக்கிறாய்? ஏன் கருகாளியம்மன் கோவிலை விட்டு இங்கே வந்தாய்?
வீரதங்காள்! எனக்கு பதினாறு வயதாகிறது. நான் பொன்னிவளநாட்டுக்குச் சென்று...
பொன்னரையும் சங்கரையும் என் இரு கொம்புகளாலும் குத்தி கொல்ல வேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது. இனிமேல் என்னால் இங்கே இருக்க முடியாது.
என் அன்பான கொம்பனே! எனக்கு பயமாக இருக்கிறது. முதலில் நீ நம் கருகாளியம்மன் கோவிலுக்கு வந்து அங்கே உன் திட்டத்தைச் சொல்லு.




கொம்பன் ஆசீர்வாதம் செய்யுமாறு கேட்டு விட்டு கோவிலை சுற்றி வந்தான்.


கொம்பன் காளிகோவிலை சுற்றி வந்து வணங்கினான்.
தாயே! எனக்கு சக்தியைக் கொடுங்கள்.
கொம்பா! இதுதான் உன் விருப்பம் என்றால், என் ஆசீர்வாதம் எப்பொழுதும் உனக்குண்டு. சென்று வா!
ஆனால்! புறப்படும் முன் உன் தாயை பார்த்துவிட்டுச் செல்.


கொம்பன் அவன் தாயைப் பார்க்கச் சென்றான்.
உர்ர்ர்ர!
உர்ர்ர்ர!
அருமை மகனே கொம்பா! இங்கே எதற்காக வந்தாய்?
தாயே! நான் பொன்னிவளநாட்டை நாசம் செய்யப் போகிறேன்.
வேண்டாம் மகனே! நீ அங்கே செல்லக்கூடாது. அந்தக் கொடூரமான காராளர்கள் உன்னைக் கொன்று விடுவார்கள்.



அதற்காகவா நீங்கள் என்னை தவம் செய்து வரம் வேண்டிப் பெற்றீர்கள்.
நான் முழுக் குடும்பத்தையும் பழிவாங்க வேண்டும் என்று வரம் கேட்டீர்கள் அல்லவா? இப்பொழுது அதை நான் நிறைவேற்ற வேண்டாமா?
ஆம் மகனே! எனக்குத் தெரியும். நீ போகத்தான் வேண்டும் என்று ஆனால்! நீ வீணே போய் ஆபத்தில் மாட்டிக் கொள்வதை நான் எப்படிப் பார்த்துக் கொண்டிருக்க முடியும்? சரி! நீ எனக்கு திரும்பி வருவதாக சத்தியம் செய்து கொடு.
சத்தியமாக நான் திரும்பி வருவேன் தாயே!
இப்பொழுது விடை பெற்றுச் சொல்கிறேன்!

# போருக்கான ஆயத்தம்


கொம்பன் காடு மலையெல்லாம் கடந்து பொன்னிவளநாட்டை வந்தடைந்தான்.
இங்கே சிறிது நேரம் தங்கி இருட்டிய பின் செல்வோம்.
இது தான் சரியான நேரம்!
பொன்னிவள நாட்டுக் குடிகளே! இதோ நான் வந்துவிட்டேன். உங்கள் அனைவரின் நிம்மதியை குழைக்க!


கொம்பன் பயிர்களையெல்லாம் நாசம் செய்து மரங்களை முட்டிச் சாய்த்தான்.
கிராக்!
உர்ர்ர்ர்!
உர்ர்ர்ர்!
குளத்தின் மதகுகளை உடைத்து, பொன்னிவளநாட்டின் வயல்களை எல்லாம் நிலம் தெரியாத படி வெள்ளக்காடாக்கிய கொம்பன் விடிந்ததும் அருகில் இருந்த காட்டில் சென்று மறைந்து கொண்டான்.
ஹா...! ஹா...!
ஸ்ஸ்ஸ்...


கொக்கரக்கோ.கோாாாா!
விடிந்துவிட்டது!
மறுநாள் காலையில் வயலுக்குப் புறப்பட்டுச் சென்ற விவசாயி..
கொக் கொக்
இது ஏதும் கனவாக இருக்குமோ? வயலையே காணவில்லையே! எதற்கும் நாளை சென்று பார்ப்போம்.
ஆ... அடக்கடவுளே!


கொர்க்! கொர்க்!
இருட்டியதும் கொம்பன் மீண்டும் பொன்னிவளநாட்டிற்குள் புகுந்து பயிர்களை அழிக்கத் தொடங்கினான்.
சடசடசடக்...
ஹா! ஹா!
உர்ர்ர்ர...
கரும்புக்காட்டை நாசம் செய்த அவன் நேற்றைய போல் அங்கிருந்த ஏரியை உடைத்து பயிர்களை எல்லாம் தண்ணீரில் மூழ்கடித்து இருந்த இடம் தெரியாமல் செய்தான்.
கிராக்!
உஸ்ஸ்ஸ்

# போருக்கான ஆயத்தம்



மீண்டும் மறுநாள் காலையில் விவசாயி வந்து பார்த்த பொழுது அவன் மூச்சே நின்று விட்டது!
ஆ.....என்ன இது அனைத்தும் அழிந்துவிட்டதே!
நேற்றுப் பார்த்ததை கனவென்று நினைத்தேனே. ஆனால், அதே கொடூரம் இன்றும் நடந்திருக்கிறதே. இதை நான் உடனே சென்று அரசரிடம் தெரிவிக்க வேண்டும்.
என்ன ஆயிற்று? எதற்காக எங்களை அழைத்தாய்?
சாமி! நம் விளைநிலங்கள் அனைத்தும் அழிந்து விட்டது.
சகோதரர்கள் இருவரும் உடனே புறப்பட்டு சென்றனர்.
ஏதோ விலங்குகள் புகுந்து நாசம் பண்ணியிருக்கின்றன.
ஆ... யார் இதை இப்படிச் செய்தது?


மூன்றாம் நாள் இரவு கொம்பன் பொன்னிவளநாட்டின் அரண்மனை தோட்டத்திற்கு சென்றான்.
எவ்வளவு அழகான தோட்டம். நொடியில் அனைத்தையும் அழித்து சின்னாபின்ன படுத்தி விடுகிறேன்.
கிராக்!
உர்ர்ர்ர்...
அழகான தோட்டம் கொம்பனின் அட்டுழியத்தால் குப்பைமேடு போல் ஆனது.

# போருக்கான ஆயத்தம்


இனி அழிப்பதற்கு ஒன்றுமில்லை. காராளர்கள் இதற்கொல்லாம் காரணமான என்னைக் கண்டு பிடிக்கும் வரை இங்கேயே ஓய்வெடுத்துக் கொள்வோம்.
கொம்பன் நிம்மதியாகத் தோட்டத்தில் அசந்து தூங்கினான். விடிந்ததும் செல்லாத்தாளுக்கு பூஜை செய்வதற்காக பூசாரி அரண்மனை தோட்டத்திற்கு பூ பறிக்க சென்றான்.
பூசாரி தோட்டத்தின் வாயிலை அண்மித்ததும் திகைத்து நின்றான்.
ம்..! என்ன இது?



ஏதோ விபரீதம் நடந்திருக்கிறது?
ஆ!
யார் இப்படி தோட்டத்தை அழித்து நாசப்படுத்தியது.
அட! ஒரு பூவாவது கடவுளுக்கென மிஞ்சி இருக்கிறதே.
இந்த பாறை மேல் ஏறினால் அதைப் பறிக்க இலகுவாக இருக்கும்.
ஆ..! யாரது என் மேல் ஏறி நிற்பது?



ஆ!
ஏய் பன்றியே! எதற்காக எங்கள் பொன்னிவளநாட்டின் நிலங்களையெல்லாம் நாசம் செய்தாய்?
நீ முதலில் கீழே இறங்கி வா! நான் சொல்கிறேன்.
துஷ்டபன்றியே! நான் கீழே வரமாட்டேன்.
அப்படியா! இப்பொழுது பார்...
ம்ம்ம்ம்...
சடார்!


ஆ!!!!
ஐயோ! அம்மா!
ர்..ர்.. என்ன சொன்னாய்!
ஆ! கொம்பா! என்னை மன்னித்து விடு. இது நீதான் என்று எனக்குத் தெரியாது.
நான் உன்னைக் கொல்லப் போவதில்லை. நான் இங்கிருக்கும் தகவலை உங்கள் அரசர்கள் இருவரிடமும் போய்க் கூறு.

# போருக்கான ஆயத்தம்


பணிப்பெண்ணே! அரசர்களிடம் நான் வந்திருப்பதாக கூறு.
என்ன விஷயம்? ஏன் இப்படி உடம்பு முழுவதும் சேறும் சகதியுமாக ஒட்டி இருக்கிறது?
சாமி! என்னை மன்னியுங்கள். உங்களுக்கு ஒரு செய்தி கொண்டு வந்துள்ளேன்.
உங்களைப்போல் வரந்தால் பெற்ற எனக்கு வயது பதினாறு
உங்களது ஆயிரமா நிலங்களையும், நந்தவனத்தையும் அழித்தேன்.
நீங்கள் சரியான ஆண்பிள்ளை என்பது உண்மையெனில்
மூன்று தினங்களுக்குள், வீரமலையில் உள்ள என்னிடம்
சண்டைக்கு வரவேண்டும்.
இல்லையேல், உங்கள் குடலை உருவி மாலையிட்டுக்கொள்வேன்
உங்கள் தங்கை பார்வதியாளை தூக்கிச்செல்வேன்.
இது சத்தியம்,
கொம்பராஜா..
ஏய் காராளர்களே! நான்தான் உங்கள் விளைநிலங்களையும் தோட்டத்தையும் நாசம் செய்தது. நான் வீரமலையில் இருக்கிறேன். மூன்று நாட்களுக்குள் என்னுடன் போரிட வர வேண்டும். இல்லையேல், உங்களை என் கொம்புகளால் குத்தி கொன்று, உங்கள் தங்கையையும் தூக்கிச் செல்வேன். இது சத்தியம், கொம்பராஜா!


உம்! உம்!
தம்பி! இந்த முட்டாள் பன்றிக்காக நாம் உயிரைப் பனையம் வைக்க வேண்டுமா?
நாம் கட்டாயம் சண்டையிட வேண்டும்.
அண்ணா! நான் சொல்வதைக் கேட்டு கோபப்பட வேண்டாம்.
கொம்பனுடன் சண்டையிடுவற்கு முன் நான் உங்களை சோதித்துப் பார்க்க வேண்டும்.
கட்டாயம் நாங்கள் இதைச் செய்ய வேண்டுமா?
நாங்கள் குளித்து விட்டு விநாயகர் கோவிலுக்குச் செல்வோம். அதன் முன்பாக நான் ஒரு துணியை நிலத்தில் விரித்து வைப்பேன்.
பின் சில விதைகளைக் எடுத்து காற்றில் வீசுவேன். அவை கிழே துணியில் விழும் முன்பாக நீங்கள் அவைகளை இரு துண்டுகளாக வெட்டி எறிந்தால்.
இந்தப் போரில் வெற்றியடைந்து பத்திரமாக திரும்பி வருவீர்கள் என்று நம்புகிறேன்.
தேவையில்லை! இப்பொழுதே சென்று கொம்பனைக் கொல்ல தயாராவோம்.
தயவுசெய்து நான் இதைச் செய்வதற்கு ஒப்புக்கொள்ளுங்கள் அண்ணா!



நினைவிருக்கட்டும் நீங்கள் எல்லா விதைகளையும் சரிபாதியாக வெட்ட வேண்டும்.
மூவரும் விநாயகர் கோவிலுக்கு சென்றனர். அங்கு தங்காள் ஒரு வெள்ளைத் துணியை தரையில் விரித்துவிட்டு பின் விதைகளை மேலே வீசினாள்.
அண்ணன்களே! தயாராகுங்கள்.
சகோதரர்கள் இருவரும் வாட்களை மேலே வீசினார்கள். விஷ்ணுவும் அவர்களுக்கு உதவினார். அதனால், அவர்களின் வாட்கள் அனைத்து விதைகளையும் வெட்டி எறிந்தது.
ஷ்ஷ்ஷ்
கிராக்!
கிராக்!


வெட்டுண்ட விதைகள் அனைத்தும் கீழே விழுந்தன. ஆனால் தங்காளின் கண்களுக்கு மட்டும்..
ஆ...! இரண்டு விதைகள் மட்டும் வெட்டுப்படவில்லையே! இதற்கு என்ன அர்த்தம் என்று எனக்கு தெரியும்.
என் அன்பான தங்கையே என்ன ஆயிற்று?
ஆனால்! இதை இவர்களுக்கு சொன்னால்...
இப்பொழுதே தங்கள் பலத்தில் சரிபாதியை இழந்து விடுவார்களே!
பிரச்சனை ஆரம்பிக்கப்போகிறது!
இது ஒரு கெட்ட சகுனம் என்று தங்காளுக்குத் தெரியும். ஆனால், இதை அவளால் அண்ணன்களிடம் கூற முடியவில்லை. விஷ்ணுவும் இதை பார்த்துக் கொண்டிருந்தார்.
என் சோதனை முடிந்தது. அரண்மனைக்குச் செல்லுங்கள் அண்ணா!



அரண்மனைக்கு வந்ததும் சங்கர் சாம்புகனை அழைத்தார்.
சாம்புகா! நாம் போரை தொடங்குவதற்கு முன்பாக பூஜை செய்ய வேண்டும்.
பெண்ணே! பூஜைக்கு வேண்டிய பொருட்களை எடுத்து வா.
பணிப்பெண் அனைத்தையும் கொண்டு வந்து சாம்புகனிடம் கொடுத்தாள்.
சாம்புகன் அதை எடுத்துக் கொண்டு அவன் தாயிடம் சென்றான்.



வீட்டிற்கு வந்த சாம்புகன் தன் தாயிடம் நடந்தது அனைத்தையும் கூறி உதவி கேட்டான். அவளும் செய்வதாக ஒப்புக் கொண்டாள்.
அம்மா! எனக்கு ஒரு உதவி செய்வீர்களா?
நாங்கள் போருக்குப் புறப்படப் போகிறோம். அதில் வெற்றி பெறுவதற்காக பூஜை செய்ய வேண்டும்.
சரி! நான் என்ன செய்ய வேண்டும்?
சிறிதளவு அரிசியை உரலில் இட்டு இடித்து மாவாக்கி எடுத்து வாருங்கள்!
சரி!



சாம்புகனின் தாய் அரிசியை உரலில் இட்டு இடிக்கத் தொடங்கினாள்.
தாயே! மாவிளக்கை தயார் செய்யுங்கள்!
சாம்புகனும் தாயும் பூஜை பொருட்களுடன் புறப்பட்டு ஊருக்குள் சென்று பூஜையில் பலியிடுவதற்கான விலங்குகளை சேகரிக்கத் தொடங்கினர்.


ஊர்மக்கள் சாம்புகனுக்கு விலங்குகளை தானமாக கொடுத்தனர். இரண்டு ஆடுகளையும், இரண்டு மாடுகளையும் அத்தோடு இரண்டு எருமைகளும், இரண்டு கோழிகளும்...
பேபே...
ம்மமாாா
கொக்! கொக்! கொக்! கொக்!
உர்ர்ர்ர்!
இறுதியாக இரண்டு பன்றிகளையும், அவன் அவர்களிடம் இருந்து பெற்றுக் கொண்டான்.
ம்மமாாா
பேபே...
உர்ர்ர்ர்!
கொக்! கொக்!
சாம்புகன் விலங்குகளை பூஜையில் படைப்பதற்கு உகந்த வகையில் மாமிசத் துண்டங்களாக்கித் தரும்படி விஷ்ணுவிடம் வேண்ட, அவரும் அவ்வாறே ஆக்கி அருளினார்.


சாம்புகனும் அவன் தாயாரும் ஆற்றங்கரைக்குச் சென்று அனைத்தையும் தயார் செய்து விட்டு பூஜையை தொடங்கினர். அவனின் தாய் முதலில் விளக்கை ஏற்றினாள்.
நீருக்கடியில் இருக்கும் போர்முரசை காத்து நிற்கும் பூதங்களே தயவு செய்து மேலே வாருங்கள்!


ஏய் பூதங்களே!...
பிலப்
பிலப்
பூதங்கள் சாம்புகனின் அழைப்பைக் ஏற்று மேலே வந்தது.
எங்கள் படையலை ஏற்றுக் கொண்டு இங்கிருந்து சென்றுவிடுங்கள்.
பூதங்கள் படையலை எடுத்துக் கொண்டு அங்கிருந்து சென்றன.
அத்தோடு, நாங்கள் நடத்தப் போகும் போருக்கு நீங்கள் எந்தவித இடையூறும் செய்யக்கூடாது.



சாம்புகன் தன் வேலை முழுப்பலத்துடன் வேகமாக பூமியில் ஊன்றினான்.
பூமியை பிளந்து ஊடுருவிச் சென்ற வேல் அங்கே நீருக்கடியில் புதைந்திருந்த போர்முரசைத் தொட்டதும்...
பிலப்
பிலப்
அது நீருக்கு மேலே வந்தது. சாம்புகன் அதை பிடித்துக் கொண்டான்.


கரைக்கு கொண்டு வந்து சுத்தம் செய்தான்.
டம்!
போர்முரசு தயாரானதும் சாம்புகன் அதை கொட்டத் தொடங்கினான்.
டம்
டம்
டம்
டம்





சாம்புகன் கொட்டிய போர்முரசின் ஒலியால் உலகம் முழுவதும் ஆடிப்போனது. அனைத்து விலங்குகளும் பயத்தில் அங்குமிங்கும் சிதறி ஓடின.




வீட்டிலிருந்த பானைகள் உடைந்து, ஊர்மக்கள் பயத்தில் வீடுகளை விட்டு வெளியே வந்தனர்.







டம்
டம்
ஆ...! அது நம் பொன்னிவளநாட்டுப் போர்முரசு.
அரண்மனையில் இருப்பவர்களும் இதை உணர்ந்தனர்.
இந்த போர்முரசின் சத்தமே எனக்கு பெரும் அச்சத்தை ஏற்படுத்துகிறது. போருக்குச் செல்லும் என் அண்ணன்கள் இனித் திரும்பப் போவதில்லை என்று எனக்குத் தெரியும். நான் என்ன செய்வது!
டம்
முன்னமே விதிக்கப்பட்ட விதியை யாராலும் மாற்ற முடியாது என்று தங்காளுக்குத் தெரியும். இருப்பினும் போருக்குப் புறப்பட தயாராகும் இருசகோதரர்களும் போரில் வெற்றி பெறுவார்களா? இல்லை அந்தக் கொம்பனின் கொம்புகளுக்கு இரையாகப் போகிறார்களா? அப்படி ஒருவேளை அண்ணன்கள் இறந்துவிட்டால் தங்காளின் நிலைமை என்னவாகும்?

# பொன்னிவளாவை பற்றி ஒரு சிறு தொகுப்பு

பொன்னிவளா ஒரு புரதான பண்டை கால கதை. இக்கதை கிராமத்து உடுக்கை பாடகர்களால் இன்றும் ஆடலும், பாடலுமாக சொல்லப்படும் ஒரு பழங்கதையாகும்.

1965 வருடம் கொங்கு நாட்டில் உள்ள மின்வசதி இல்லாத சிறு கிராமத்தில், ஒலி நாடாவை கொண்டு, 18 இரவுகளில் ஒலி பதிவு செய்யப்பட்ட கதையாகும். முதன் முறையாக, கம்யூட்டர் 2D அனிமேஷனில் 26 தொலைக்காட்சி தொடர்களாக ஊருவாக்கப்பட்டு, பல மொழிகளில் பதிவு செய்யப்பட்டது.

ராஜாங்கம் என்பது அதன் மக்களால்தான் கட்டமைக்கப்படுகிறது. உதாரணமாக குடையுன் பரந்து விரிந்த மேல்பகுதி ராஜாங்கம் என்றால், மக்கள்தான் அதனை தாங்கி நிற்கும் கம்பிகள்.

எனவே ஒரு ராஜாங்கத்தைப்பற்றி சொல்லவேண்டும் என்றால், அந்த ராஜாங்கத்தின் மக்களை பற்றியும் சொல்லவேண்டும். அப்போதுதான் அந்த ராஜாங்கத்தைப்பற்றி முழுமையாக புரிந்து கொள்ள முடியும். இக்கதை கொங்கு மக்களின் கதை. இக்கதை தோராயமாக ஆறாம் நூற்றாண்டில் கொங்கு மக்களின் வாழ்க்கை முறையையும், அவர்களின் சமுதாய மற்றும் நாகரீக வாழ்க்கையையும் சித்தரிக்கிறது.



மேலும் பொன்னிவளாவைப்பற்றி விபரம் அறிய பொன்னிவள இணைய தளத்திற்கு செல்லுகள்
www.ponnivala.com/comic23tamil




வாருங்கள்!

# பொன்னிவள

அங்காடிக்கு

சித்திரக்கதை - HD அனிமேஷன் - விளையாட்டு - வாணிக பொருட்கள் - கேளிக்கை - மேலும் பல இலவசங்கள்!







01. காராளர் தோற்றம்
02. அநாதைச்சிறுவன்
03. நாடு கடத்தல்
04. உரிமையுள்ள காதலி
05. அதிசய கல்யாணம்
06. வருத்த விதை
07. ஆயிரம் யாசகர்கள்
08. கொடிய சாபம்
09. உத்தமியின் கோபம்
10. விரக்தியுன் பலன்
11. சாப நிவர்த்தி
12. சொர்க்க வாசல்
13. விதியின் கணக்கு
14. கோவில் ரகசியம்
15. உண்மை தெரிந்தது
16. நாடு திரும்புதல்
17. மானம் பெரிதென்று
18. சினம் கொண்ட சின்னவர்
19. சுதந்திரம் வென்றது
20. ஆசீர்வதிக்கப்பட்ட வாள்
21. சாம்புகனின் தந்திரம்
22. புதிய சவால்
23. நேருக்கு நேர்
24. எதிரியின் சவால்
25. பெரும் தியாகம்
26. ஒரு சகாப்தம் முடிந்தது

## 26யும் பெற்றுகொள்ள!

www.ponnivalamarket.com

மேலும் விபரங்களுக்கு இணைய தளத்திற்கு செல்க:

www.ponnivala.com


ISBN 978-1-927093-64-1

90000 >

9 781927 093641



© 2012 Ponnivala Publishing